# பண்கொம்.net

“ ஒற்றுமையின் ஒளி ”

இணையத்தளத்தில் வெளிவந்த புலம்பெயர் நம்

பண் மக்களின் சிறுகதை தொகுப்பு





admin@panncom.net
www.panncom.net

# ஈவு இரக்கம்

கட்டை வால் முன்னக்கால்களை முன்நோக்கிநீட்டியும் பின்னங்கால்களை மடக்கிக்கொண்டும் இருந்து கொண்டு சின்னி தூக்கிப்போடுகிற தேவையற்ற கீளி மீன்களையும் இறால் கூனிகளையும் சுவைத்துக்கொண்டிருந்தது .அதற்க்கு எயமானர் இல்லாததினால் சின்னி இறால் வியாபாரம் செய்கின்ற அதிகாலை நேரத்தில் உருண்டோடுகின்ற அந்த ஒரு சில மணித்துளிகளே அதற்கு உணவு கிடைக்கக்கூடிய நேரம் .மிகுதி நேரங்களில் காடேறி கோவில் வாசலில்த்தான் இருக்கும். இருந்தாலும் காடேறி கோவிலுக்கு முன் பக்கமாக இருக்கின்ற இரட்டை முச்சந்திகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.அயல் அட்டைகளில் உள்ள நாய்களைத்தவிர வேறு நாய்கள் அப்பகுதிக்குள் வந்தால் மற்றைய நாய்களை விட கட்டை வால்தான் முன் நின்று எதிர்த்துக்குரைக்கும்.

கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு முன்னாள் யாரோ இரவோடு இரவாக காடேறி கோவிலுக்கு முன்னால இருந்த ஒற்றைக்கல் குண்டுக்குப்பக்கத்தில் கொண்டுவந்து போட்டுவிட்டு போய் விட்டார்கள்.பெட்டைகுட்டியாய் பிறந்துவிட்ட பாவத்திற்காக தாயை பிரித்து சகோதரர்களைப்பிரித்து கொண்டுவந்து எறிந்துவிட்டு சென்றுவிட்டார்கள் ஈவு இரக்கம் அற்றவர்கள். அது சரி மனிதப் பிறவியிலேயே பெண்ணாக பிறந்துவிட்டால் வேண்டா வெறுப்பாக பார்க்கும் இவ்வுலகில் நாய்க்கு மட்டும் விதி விலக்கா என்ன? கொண்டுவந்து போடப்பட்ட அடுத்த நாளே யாரோ அதன் வால் மீது சயிக்கிலை ஏற்றி விட்டார்கள்.அப்போது நசிந்த அதன் வால் காலப்போக்கில் கட்டையாகி விட்டது. அதைக்கொண்டுவந்து போடப்பட்ட இடத்தில் இருந்த ஒற்றைக்கல் குண்டு கூட வழிப்போக்கர்களின் தாக சாந்தி தீர்ப்பதற்காக யாரோ ஒரு புண்ணியவானால் ஒரே கல்லில் கடைந்தெடுக்கப்பட்ட தண்ணீர் குண்டுதான்.அருகில் ஒரு சுமைதாங்கி கூட இருந்தது. அந்த

ஒற்றைக்கல் குண்டும் எம்மூரவர்களின் சரித்திர சின்னங்களில் ஒன்றுதான்.அது இப்போது எங்கிருக்கிறதென்று தெரியவில்லை.

கட்டை வாலை ஆதரித்த ஒரே ஜீவன் இறால் விக்கும் சின்னி மட்டும் தான்.அதை திட்டுவதும் அரவணைப்பதும் சின்னிதான். இறாலுக்குள் இருக்கும் வியாபாரத்துக்கு உதவாத கழிவுகள் கட்டை வாலுக்கு மட்டும் தான் கிடைக்கும். காகங்களும் போட்டி போட்டு தோர்த்துப்போய் விடும்.

கனகலிங்கன் கிணற்றடிக்கு குளிக்கப்போகுமுன் கழிவு தண்ணி போகும் வாய்க்காலை தன் வீட்டு எலுமிச்சை மரத்தின்பக்கமாக திருப்பிவிட்டுக்கொண்டிருந்தான்.முத்தத்தில் பாத்திரங்கள் மினுக்கிக் கொண்டிருந்த கமலம் சொன்னால் நீங்களும் உந்த எழுமிச்ச மரத்தை பெத்த பிள்ளை மாதிரி மூண்டு வரியமாய் வளக்கிறீங்கள் அது உந்த வளத்தி வளைந்தும் என்னும் ஒரு பிஞ்சுகூட காய்க்கி தில்ல,எண்டு முணுமுணுத்தது கனகலிங்கனின் காதுகளில் விளத்தவறவில்லை. தருமண்ணை சொன்னமாதிரி செய்தால் அது நல்லாய் காய்க்கும். எல்லாத்துக்கும் ஒரு சந்தர்ப்பம் வரும் அப்ப பாப்போம்.என்று சொல்லிவிட்டு குளிக்க ஆரம்பித்தான்.

இரண்டு நாட்களாய் சின்னி வியாபாரத்துக்கு வரவில்லை இந்த இரண்டு நாட்களும் சின்னிக்காக காத்திருந்து கட்டைவால் சாப்பாடு இல்லாமல் மிகவும் சோர்ந்துபோய் விட்டது.மூன்றாவது நாளும் அதே போன்று காத்திருந்துவிட்டு வைரவர் கோவிலில் யாரோ விளக்கு கொளித்திவிட்டு போய் இருக்கிறார்கள் காற்றில் விளக்கு அணைந்திருந்தது. அந்தவிளக்குக்குள் இருந்த மிச்ச எண்ணை எல்லாவற்றையும் துளி விடாமல் குடித்துவிட்டு ஒற்றைக்கல் குண்டுக்கு அருகில் வந்து படுத்திருந்தது.சிறிது நேரத்தில் அந்த வழியாக பறைமேளச்சத்தத்தொடு ஒரு பிரேத ஊர்வலம் ஒன்று சம்பில் சுடலையை நோக்கி சென்று கொண்டிருந்தது.கட்டைவால் திடுக்கிட்டு எழும்பி முகத்தை சரித்து

கூட்டத்தை வேடிக்கை பார்த்தது.பாவம் அதற்கு எப்படித்தெரியும் அந்தப்பாடையில் போவது சின்னிதான் என்று.மூன்று நாட்களுக்கு முன் காச்சலால் படுத்த படுக்கையாகிவிட்ட சின்னி நேற்று இந்த உலகை விட்டு போய் விட்டாள். கட்டைவாலையும்தான்.

ஐந்து நாட்கள் ஆகிவிட்டது கட்டைவாலின் வயிறு ஒட்டிப்போய் எலும்புகள் தொலை கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிடும் போல் இருந்தது.சோர்வான நடையோடு வைரவர் கோவில் வாசலிலேயே படுத்திருந்தது.அப்பொழுது அந்தவழியால் வந்த கனகலின்கனின் எட்டு வயது குறும்புக்கார மகன் கட்டை வாலை சீண்டிப்பார்க்க ஆசைப்பட்டு அதன் காலை தன் காலால் உளக்கினான்.தாங்க முடியாத பசியோடு இருந்த கட்டைவால் தாங்கமுடியாத கோபத்தில் அப்படியே துள்ளி எழும்பி வளைந்து தன் வேட்டைப்பல்லை அவனின் கால் துடையில் ஆழமாகப்பதித்துவிட்டது. அம்மா என்று அலறி அடித்துக்கொண்டு வீ ட்டை நோக்கி ஓடினான். கமலம் என்னப்பு நடந்தது என்று மகனை நோக்கி ஓடினாள். கோடிக்குள் எதோ அலுவலாக இருந்த கனகலிங்கனும் ஓடிவந்தான். காடேறி கோவிலுக்கு முன்னால நிக்கிற அந்த நாய் கடிச்சுப்போட்டுது என்று மட்டும் சொன்னான். தான் அதற்கு என்ன செய்தான் என்பதை சொல்லவில்லை. பக்கத்து வீ ட்டுகாரர்கள் புதினம் பாக்க ஓடிவந்தார்கள். கனகலிங்கன் சொன்னான் அந்த நாய் இப்ப நாலஞ்சு நாளாய் ஒருமாதிரித்தான் நிக்கிது விசர் பிடிச்சிவிட்டுது போல என்று பெரிய ஆராச்சியாளன் மாதிரிச்சொன்னான். உத எனி உயிரோட விட்டால் பதையால போறவாறவை எல்லாரையும் கடிக்கப்போகுது உதய் ஏதாவது செய்யவேணும், என்று சொல்லி ஒரே கல்லில இரண்டு மாங்காய் அடிக்கப்பார்த்தான்.அந்த இரண்டாவது மாங்காய் தருமண்ணை அவனுக்கு சொன்ன ஐடியா ஏதாவது செத்த ஆடு மாடு நாயையோ கொண்டுவந்து எலுமிச்சை மரத்துக்கு கீழ தாட்டுவிட்டால் பிறகு நல்லாய் காய்க்கும் என்பதுதான். மகனை தேற்றிக்கொண்டு அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக அயத்தமானான் கனகலிங்கன்.

அடுத்தநாள் ஒரு உலக்கையோடு காடேறி கோவிலை நோக்கி போனான் கனகலிங்கன். கட்டைவால் ஒற்றைக்கல் குண்டுக்கு பக்கத்தில் நின்று காலை மடக்கி படுக்க முடியாமல் மயக்கமான நிலையில் வாயால் வீ ணீர் வடிய நின்று கொண்டிருந்தது. கனகலிங்கன் சத்தம்போடாமல் அதன் பின்பக்கமாக மெதுவாகச் சென்று சரியான இடம் வந்ததும் நின்றான்.அடுத்த வினாடி அவன் கையில் இருந்த உலக்கை மேல்நோக்கி உயர்ந்து கீழிறங்கியது. ஒரு கேரல் சத்தத்தோடு கட்டைவாலின் தலை மண்ணைத் தொட்டது. அதன் உடலில் இருந்த கொஞ்ச இரத்தமும் அந்த மண்ணை ஈரமாக்கியது.ஒரு நிமிடத்தில் அதன் உயிர் போய்விட்டது என்பதை தீர்மானித்துவிட்டு பின்னங்கால் இரண்டிலும் பிடித்து தூக்கிக்கொண்டு வீ டுநோக்கி சென்றுகொண்டிருந்தான். எந்த ஒற்றைக்கல் குண்டுக்கு பக்கத்தில் அதன் வாழ்க்கை ஆரம்பித்ததோ அதே இடத்தில் அதன் வாழ்வு முடிந்துவிட்டது.இவ்வளவையும் காடேறி வைரவர் பார்த்துக்கொண்டிருந்தார் புன் சிரிப்போடு நாய் வாகனத்தின் மீது இருந்துகொண்டு.

(முற்றும்)

# ஒரு நண்பனின் கதை இது

சூரியும் நானும் இளவயதுப் பாடசாலை நாட்களில் இருந்தே நண்பர்களாக இருக்கிறோம். அக்காலத்தில் சூரிக்கு பல பாடசாலை நண்பர்கள் இருந்தாலும் அவர்கள் எதோ ஒரு விதத்தில் அவனிடம் இருக்கின்ற அறியாமையையும் கள்ளம் கபடமற்ற வெளிப்படையான மனதையும் தங்களுக்கு சாதகமாக பயன் படுத்தி தங்கள் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டதால் அவர்களின் நட்பு சூரிக்கு நிலைக்கவில்லை.எதோ எனக்கு மட்டும் அவனை புரிந்து கொள்ளும் ஆற்றலை இறைவன் கொடுத்ததால் இன்றுவரை நாங்கள் இருவரும் இணை பிரியாமல் இருக்கிறோம்.

சூரிக்கும் படிப்புக்கும் முக்கால் கிலோ மீற்றர் தூரம் தான்.பின்வாங்கில் இருந்து என் தோள் மூட்டுக்கு மேலால் எட்டிப்பார்த்து எழுதுவான். அவனுக்காகவே நான் என் இடது கை தோள்மூட்டை கீழ் நோக்கி சரித்துப்பிடிக்க வேண்டும்.சில நேரங்களில் என்னையும் அறியாமல் என் தோள்மூட்டு உயர்ந்துவிட்டால் அவன் தன்னுடைய இடது கை ஆள்க்காட்டி விரலால் கீழ்நோக்கி அமத்திவிடுவான். சில நேரம் எனக்கு சரியான கோவம் வரும் நண்பன் என்றுவிட்டு அடக்கிக்கொள்வேன். கரும்பலகையை பார்த்து எழுதுங்கோ எண்டு வாத்தியார் சொன்னாலும் அவன் என்னைத்தான் பாத்து எழுதுவான். அப்படி அவனுக்கு பழகிப்போச்சு. அப்படி நாங்கள் பள்ளிக்குடப் படிப்பை முடிக்கிற நேரத்திலதான் வெளிநாட்டு மோகம் எங்கட ஊரில உச்சம் தலையில ஏறி நின்றது.

இத்தாலியில் இருந்து வந்த எங்கட சொந்தக்காரர் ஒருவர் வரேக்க விசா முத்திரை கொண்டு வந்தவர். அவர் திரும்பி இத்தாலிக்கு வரேக்க என்னையும் தன்னோட கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். ஊரில் இருந்து வெளிக்கிடேக்கையே சூரி சொல்லிவிட்டவன் ,நீ முதல் போய் பிறகு நான் வாறத்துக்கு ஒழுங்குகள் செய் என்ன மச்சான், என்று உரிமையோடு சொன்னான். அவனுடைய தகப்பனும் கெஞ்சுகிற மாதிரி ,டேய் தம்பி நீ முதல் போய் உந்த மொக்கனுக்கும் ஒரு வளி பண்ணடா தம்பி, அவருக்கு அவன் மேல் அப்படி ஒரு அபிப்பிராயம்.

நானும் இத்தாலிக்கு வந்து இதே வேலையாய் இருக்கிற எங்கட சொந்தக்காரரிட்ட சொல்லி சூரியையும் கூப்பிட்டுவிட்டன். சூரி வந்தாப்பிறகு ஒரு மூண்டு மாதம்தான் இத்தாலியில் இருந்திருப்போம் அதுக்குப்பிறகு இரண்டுபேரும் யேர்மனி நாட்டுக்கு வந்து நல்ல விசாவும் எடுத்து இருந்தோம். அப்பதான் எங்கட வீ ட்டில எனக்கு கலியாணம் பேசி வசந்தாவை பொன்சர் பண்ணிக்கூப்பிட்டு

கலியாணமும் நல்லமாதிரி நடந்து இப்ப எங்களுக்கு மூண்டுவயதில ஒரு மகன் இருக்கிறான்.

ஒரு நாள் நான் வீட்டில இருக்கேக்க டெலிபோன் மணி அடிச்சுது எடுத்து ஹலோ என்றதும்,அந்தப்பக்கம் ஊரில் இருந்து சூரியின் தகப்பனார் பேசினார்.அவர் பேச்சில் ஜீவன் குறைவாகவே இருந்தது.ஓமடா தம்பி நான் தான் கதைக்கிறன்,என்று ஆரம்பித்தவர் ஊர் புதினங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு சூரியின் கலியாணத்தை பற்றி பேச்சை ஆரம்பித்தார்.நான் எத்தினையோ தரம் டெலிபோன் எடுத்துக்கேட்டுபோட்டன் அவன் தனக்கு கலியாணம் வேண்டாம் வேண்டாம் எண்டு சொல்லுறான் தம்பி.அவனை ஒருக்கா என்னண்டு கேளடா தம்பிஎன்று கர கரத்த குரலில் கூறினார்.நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதயுங்கோ ஐயா.நான் அவனை கூப்பிட்டு கதைக்கிறன்,என்று அவருக்கு நம்பிக்கை ஊட்டிவிட்டு டெலிபோனை வைத்தேன்.

அடுத்த நாள் சூரி என்னட்ட ஒரு அலுவலாய் வந்தான்.வந்த இடத்தில் முதல் நாள் அவனுடைய தகப்பனாரோடு கதைத்த விஷயத்தைப்பற்றி கேட்டன்.உடனே அவன் தலை கீழே நிலத்தை நோக்கி பார்க்க ஆரம்பித்து விட்டது.நான் என்கையால் அவன் நாடியை பிடித்து நிமித்தி ,டேய் பதில சொல்லடா என்னடா விளையாடுறியே,என்று நான் கேட்க அவன் கண்களை உருட்டி பக்கத்தில் நின்ற என் மனைவி வசந்தாவை பார்த்தான். அப்பொழுதுதான் எனக்கு விளங்கியது அவனிடம் எதோ ஒரு ரகசியம் புதைந்து கிடக்கிறது அதை வெளியே சொல்ல பயப்பிடுகிறான் என்று. சரி சரி வா வெளியில காத்தொட்டமாய் கொஞ்ச தூரம் நடந்து போய் விட்டு வருவோம்,என்று வசந்தாவிடம் சொல்லிவிட்டு இருவரும் வெளியே நடக்க ஆரம்பித்தோம்.

வெளியில் வந்ததும் அவன் என்ன சொல்லப்போறன் எண்ட ஏக்கத்தோடு நான் நடக்க எப்படிச்சொல்லுறது என்ற தயக்கத்தோட அவனும் நடந்து வந்தான்.

கொஞ்ச நேரத்தில அவனே சொல்ல ஆரம்பித்தான்,டேய் நான் வேலை செய்யிற இடத்தில என்னோட வேலை செய்யிற ஒரு வெள்ளைக்கார பிள்ளையை நான் விரும்பிறன்.அந்தப்பிள்ளையும் என்ன விரும்புது நாங்கள் கலியாணம் செய்து சந்தோசமாய் வாழுறது உணர கையிலதான்ரா இருக்கிது எனக்கிருந்த பயத்தால தான்ரா நான் இவ்வளவு நாளும் உன்னட்ட சொல்லேல்ல எப்பிடியாவது நீதான்ரா எனக்கு உதவி செய்யவேணும் என்று குழந்தை மாதிரி அழாத குறையாக கேஞ்ச்சிக்கொண்டிருந்தான்.எனக்கு தலை எல்லாம் கிறு கிறுத்துக்கொண்டு வந்துவிட்டுது.நேற்றுத்தான் இவனை பெத்த தகப்பனுக்கு இவனை கலியாணத்துக்கு சம்மதிக்க வைக்கிறான் எண்டு உறுதி அளிச்சனான்.ஆனால் இவன் இப்பிடி ஒரு குண்டை தூக்கிப்போடுவான் என்று நான் கனவிலும் நினைக்கேல்லை.எந்த புத்துக்கிள்ள எந்தப்பாம்பு இருக்கிதெண்டே தெரியாமல் இருக்குது.எனக்கு வந்த ஆத்திரத்துக்கு சூரியின்ர பிடரியை அமத்தி பிடிச்சுக்கொண்டு அவன்ர முதுகில ஓங்கிக் குத்தவேணும்போல இருந்திச்சுது.

ஒரு பக்கம் நண்பன்,என்னுமொரு பக்கம் வயதான அவனுடைய தகப்பனார், பிரண்டு பிரண்டு படுத்தாலும் எனக்கு நித்திரையே வரமாட்டன் என்டுவிட்டுது.அந்த நேரத்தில் தான் வசந்தா சொன்னாள் இஞ்சருங்கோ தகப்பன் வந்து அவர் வாழ்ந்து முடிச்சவர்,சூரி அண்ணர் எனி வாழப்போறவர், ,தகப்பன் தாயை பிறகு சமாளிக்கலாம்.இப்ப சூரி அண்ணற்ற விருப்பத்துக்கு நாங்கள்தான் உதவி செய்ய வேணும்.வசந்தாவின் அந்த போதனையை சிரத்தில் கொண்டு காரியத்தில் இறங்கினேன்.

சூரிக்கும் பியங்கா என்ற அந்த யேர்மனிய பெண்ணுக்கும் பதிவுத்திருமணம் முடிந்து ஒரு உணவு விடுதியில் விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டது.நான், வசந்தா,எங்கள் மகன்,என்னும் ஒரு சில தமிழ் குடும்பத்தினரும் மற்றும் வெள்ளைக்காரர்களும் வரவளைக்கப்பட்டனர்.மது மருந்தும் விருந்தும் தடல் புடலாக

பரிமாறப்பட்டது.சிறுது நேரத்தில் வெள்ளைக்காரர்கள் ஒவ்வொருவராக தத்தம் ஜோடிகளோடு மெல்லிய இசைக்கு நடனம் ஆடத் தொடங்கினர். பியங்காவும் சூரியை அணைத்து நடனம் ஆடத்தொடங்கினாள்.சூரிக்கு நடனம் சுட்டுப்போட்டாலும் வராது. அவன் ஆடத்தேரியாமல் திண்டாடுவதை பார்க்க எனக்கு சிரிப்புத்தான் வந்தது.சிரித்தும் விட்டேன்.வசந்த உஷ்,என்று அதட்டினாள்.

சூரியின் திருமண விஷயத்தை அறிந்த அவனது பெற்றோர் அவனுடன் கதை பேச்சு இல்லாமல் இருந்தனர்.திடீர் என்று ஒரு நாள் அவனுடைய தகப்பனார் கிணற்றடியில் வழுக்கி விழுந்து கால் முறிந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தவர் இரண்டு கிழமையால் உள்காயம் சீழ் பிடித்து ஏற்ப்பாக்கி இறந்துவிட்டதாக சூரிக்கு தகவல் வந்தது.ஒரு கிழமை லீவு எடுத்துக்கொண்டு ஊருக்கு போய் தகப்பனாருக்கான கடமையை முடித்துக்கொண்டு தாயை விட்டு பிரிய மனம் இல்லாமல் யேர்மனிக்கு திரும்பினான்.ஒரு கிழமை லீவு காணதுதான் என்ன செய்வது பியங்காவின் கட்டளை அப்படி.

இப்பொழுது அவர்களுக்கு ஒரு பெண் பிள்ளையும் பிறந்துவிட்டது.குழந்தை சரியாக வெள்ளை நிற சூரிதான்.பிள்ளை பிறந்த பிறகுதான் பியங்காவின் சுய ரூபங்கள் சூரிக்கு தெரியவந்தது. அவர்களுக்குள் நடக்கும் ஒவ்வொரு பிரச்சனையும் என்னிடம் வந்து சொல்லி கவலைப்படுவான்.

ஒரு நாள் அவனை பார்த்தபோது அவன் கண்கள் இரண்டும் சிவந்து போய் இருந்தது.நான் என்னடா இது என்று கேட்டதுக்கு,இப்ப இரண்டு கிழமையாய் சரியான நித்திரை இல்லையடாப்பா,இரவில குழந்தை எழும்பி அழுதால் நான்தான் தூக்க வேணும், பால் கரைச்சு குடுக்க வேணும், இந்தக்கிழமை என்ற முறை ஒண்டவிட்டு ஒருகிழமை மாறி மாறி இரவில குழந்தையை பார்க்க

வேணும்.போனகிழமை பியங்காவுக்கு வருத்தமேண்டத்தால போன கிழமையும் நான்தான் குழந்தையை பார்த்தனான்.எனி விடிய எழும்பி வேலைக்கும் போகவேணும். என்று சூரி சொல்லி கவலைப்பட்டான் அவனை பார்க்க எனக்கு சரியான கவலையாக இருந்தது. இப்படி சரிக்குச்சரி பொறுப்புகள் என்ற ரீதியில் சூரியின் சந்தோசங்களும் கனவுகளும் உடைந்து சுக்கு நூறாகி விட்டது.

ஒரு நாள் ஊரில் இருந்து தாயின் சுகயீன செய்தியறிந்து சூரி ஊருக்கு போக வெளிக்கிட்ட நேரம் பிரச்சனை மிகப்பெரிய பூகம்பம் ஆகிவிட்டது. அப்பூகம்பத்தின் தாக்கம் விவாகரத்து வரை செல்லும் என்று சூரி நினைத்துக் கூட பார்க்கவில்லை. நீதிமன்றம் வரை சென்ற பியங்கா வென்று விட்டாள்.ஆம் சூரிக்கும் அவளுக்கும் விவாகரத்து கிடைத்துவிட்டது.கிழமையில் ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்துக்கு சூரி தன் மகளை பார்க்கலாம் என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

கடைசியாக நீதிமன்றத்தில் இருந்து பியங்கா தன் மகளை கூட்டிக்கொண்டு போகும் பொழுது தான் நித்திரை முழிச்சு தூக்கி வளர்த்த தன் மகள் அப்பாவை பார்த்து கை அசைத்துக்கொண்டு போனதை பார்த்த சூரியின் இருதயமே வெடித்துவிடும் போல் இருந்தது. நான் ஓடிச்சென்று அவன் அருகில் நின்றேன். இடியே விழுந்தாலும் கலங்காத சூரி விம்மி விம்மி அழத் தொடங்கினான். எனக்கேன்ரா இப்பிடியெல்லாம் நடக்கிது ,என்று சொல்லிக் கொண்டே என் தோள்களில் சாய்ந்தான். அப்பொழுது என் தன்நம்பிக்கை பேசியது, எங்கள் பண்பாட்டு பழக்க வழக்கங்களோடும் கலாச்சாரத்தோடும், சூரிக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அமைத்துக்கொடுப்பேன் என்ற நம்பிக்கையோடு என் நண்பனின் தோள்களில் கையை போட்டு அழைத்துச்சென்றேன். (முற்றும்) துலங்கன்.

# கூடி விளையாடு பாப்பா

சுமதியின் பாதம் வருடி பள்ளி எழுப்பினர் தோழியர். முதலில் பஞ்சுதலையணையின் மேல் பாதம் பதித்த அவள் பாதம் மீண்டும் இறங்கி பளிங்குத்தரையை முத்தமிட்டது. பூபாளராகமிசைக்க, தோழியர் மலர் தூவ, காண்டாமணி ஒலிக்க, ஓரடிக்கோர் ஓர் பாதமென நகர்த்தியவாறு பன்னீர்குளம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள். திடீரென அந்த சேவல் கூவும் சத்தம் அவள் காதுகளை ஊடறுத்தது .உடன் கண்விழித்துப் பார்த்தாள்.

தங்கச்சியும் தம்பியும் இன்னும் நித்திரை கொள்ளுகினம். கனவில் அவள் காதுகளில் கேட்ட சேவல் கூவலும், கண்ணகை அம்மன் கோவில் காண்டாமணி ஓசையும், தொடர்ந்து கேட்டுக் கொண்டேதான் இருந்தது. கண்களைக்கசக்கி ஒழி ஏற்றிவிட்டு எழும்பி காலைக்கடன்களை முடித்து,முற்றத்தில் நின்று சூரியனைத் தொழுதாள். சிட்டுக்குருவிகள் ரீங்காரமிட்டு புத்தம் புது மலர்களில் புதிய தேன் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தன.கோடிக்குள் சென்றாள் சுமதி வீ டுச்சுவரோடு அடிக்கிவைத்திருந்த பணம் பாளைகள் சிலவற்றை கொண்டுவந்து தேத்தண்ணிக்கு அடுப்பு மூட்டிவிட்டு வந்து தம்பியையும் தங்கையையும் எழுப்பி காலைக்கடன்களை முடிக்க அனுப்பினாள்.

முதலில் எழும்ப பஞ்சிப்பட்ட தம்பி சிணுங்கிக்கொண்டு கிணற்றடிக்குப் போனான். அப்படியே தகப்பனார் படுத்திருந்த சார்மனைகுந்துக்கு வந்தவள் அவர் ஏற்க்கனவே கண் முளிச்சிருந்ததை பார்த்தாள். ஐயா இந்தாருங்கோ கரி உப்பிடியே மெல்ல நாரிய நிமித்தி இருந்துகொண்டு பல்ல மினுக்குங்கோ,நான் சுடுதண்ணி கலந்து கொண்டுவாரன் உங்கட மேலை ஒருக்கா கழுவித் துடச்சுவிடுகிரன் என்ன. ஆமாம் இன்னொருவர் பராமரிப்பில் இருக்க வேண்டிய நிலைமை தகப்பனுக்கு.

நான்கு மாதங்களுக்கு முன் வரை பனை மரம் சீவும் தொழில் செய்து கொண்டிருந்த மனிதர் அதுவரை அவர் பலமும்,கைதேர்ந்த கலையும் இன்றுகூட பணிப்புலத்திலும் பணிப்புலத்தை ஒட்டிய கிராமங்களிலும் உள்ள ஐம்பது வீ தமான கல் வீ டுகளில் வளைகளாகவும் சிலாகைகளாகவும் அவ்வீ டுகளிக்குகவசமாக இருந்துகொண்டுதான் இருக்கிறது. பனை மரத்தை பிளப்பதற்காக இறிக்கியிருந்த ஆப்பை கழட்டும்போது தற்செயலாக அது பறந்து வந்து அவருடைய நாரியை பாதம் பார்த்து விட்டது. இரும்பு ஆப்பல்லவா இரண்டு விலா எலும்புகள் முறிந்து விட்டது.அப்படி இப்படி என்று வயித்தியங்கள் செய்தும் நல்ல முன்னேற்றம் இல்லை. அப்போதிருந்து வேலை வெட்டிக்கு போக முடியாமல் படுத்த படுக்கையாகி விட்டார்.

இளையவன் குமார் பிறக்கும் பொழுதே பிரசவத்தில் ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக தாயை இழந்திருந்த அக்குடும்பத்தை சுமதியே மூத்த மகள் என்ற பொறுப்போடு தங்க வேண்டிய நிலைமை.இளமைப்பருவ இனிய அனுபவங்களை இழந்த நிலையில் சுமதி தன் தம்பிக்கும் தங்கைக்கும் அக்காவுக்கு அக்காவாகவும் தாய்க்கு தாயாகவும் தாங்கி வளர்த்தாள்.குடும்ப வருமானத்திற்கு பணிப்புலம் வாசிகசாலையில் இயங்கிக்கொண்டிருந்த பாலர் பாடசாலையில் ஆசிரியைப் பணியை இற்றைக்கு ஆறு வருடங்களாக ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறாள்.அத்தோடு மாலை நேரங்களில் பாடசாலை பிள்ளைகளுக்கு ரியூசன் சொல்லிக்கொடுப்பாள் அந்த வருமானம் எத்தனைக்குத்தான் போதும்.அவ்வப்போது அவள் மாமாவும் அக்குடும்பத்துக்கான சிறு உதவிகளை செய்துகொண்டிருந்தார்.

தம்பி தங்கயை பாடசாலைக்கு அனுப்பி வைத்துவிட்டு தகப்பனாருக்கும் தேநீரை கொடுத்து தானும் வேலைக்கு போகஆயத்தமானாள்.பக்கத்து வீ ட்டு கிளியக்காவை கூப்பிட்டு, கிளியக்கா நீங்கள் ஐயாவுக்கு நேற்று வாங்கிக்குடுத்த குழல் புட்டு

அவருக்கு தொண்டேக்கால போகேல்லயாம் இண்டைக்கு அவருக்கு இடியப்பம் வாங்கிக்குடுங்கோ என்ன? எண்டு கிளியக்காவிடம் காசை குடுத்துவிட்டு ஐயா நான் போவிட்டு வாறன் கிளியக்கா இடியப்பம் வந்கித்தருவா ஒண்டும் மிச்சம் வைக்காமல் சாப்பிட வேணும்.என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தவளை இயலாமைக்கண்களோடு வழியனுப்பி வைத்துவிட்டு தலை மாட்டில் இருந்த தன்னுடைய வாச்சிகளை தடவிப்பார்த்தார்.அவருடைய தொழில் நேர்மையையும் தன்னப்பிக்கயையும் இன்றும் பறை சற்றிக்கொண்டிருப்பவை அந்த இரண்டு வாச்சிகளும் தான்.

படலையை திறந்து ஒழுங்கையில் நடக்க ஆரம்பித்த சுமதி வழியிலேயே இரண்டு குழந்தைகளை தன்னோடு சேர்த்து அழைத்துச் சென்றாள்.வழியில் அப்பொழுதுதான் எதேர்ச்சையாக சந்தித்தது போல கமலா எட சுமதிய சந்திச்சது நல்லதா போச்சு இவனையும் குட்டிக்கொண்டு போறியே பிள்ளை,என்று சொல்லி தன் மகனையும் சுமதியோடு அனுப்பி வைத்தாள்.பாவம் அவளும் நேரத்துக்கு வயல் வேலைக்கு போக வேணும். இப்படி போகும் வழியிலேயே ஐந்தாறு குழந்தைகளை தன்னோடு அழைத்துச் செல்வது நாளாந்தம் நடப்பதுதான்.

தற்காலிய்மாக ஒரு வீட்டில்தான் பாலர் பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருந்தது.அங்கு போய் சேர்ந்ததும் ஏற்க்கனவே வந்து சேர்ந்த பிள்ளைகளையும் தாய்மாரையும் கண்டு புன்னகை பூத்தாள். அநேகமான பிள்ளைகள் குஞ்சங்கலட்டியை சேர்ந்தவர்கள். ஒன்றிரண்டு பிள்ளைகள் தான் அம்மன் கோவிலடியையும் கலட்டியையும் சேர்ந்தவர்கள். சுமதி தாய்மாரை அனுப்பி வைத்து விட்டு தன் பணியை ஆரம்பித்தாள்.அழுதுகொண்டிருந்த மிதுசாவை தேற்றினாள். தனுசன் ஒண்டுக்கு போக வேணும் எண்டு சிணிங்கியவனை அழைத்துச் சென்றாள். குழந்தைகளுக்கு கதை சொல்ல ஆரம்பித்தாள். அப்பொழுதுதான் ரோட்டில் கோமதி தன் மகளான மதுமிதாவோடு உள்ளே வராமல் படலைக்குள்ளேயே நின்று

கொண்டு சுமதியை கூப்பிட்டாள். காசு கீளே விழுந்தாலும் குனிந்து எடுக்க முடியாத தடித்த உடல் வாகு உடையவள்.கோமதி அதோடு காசு கூடிய குடும்பத்தை சேர்ந்தவளும் கூட. தகப்பனாருக்கு எழுரவர்கள் வைத்த பட்டப்பெயர் எல்லைச் சண்டை ஏகாம்பரம். காணி பூமி என்று பிடித்து அவர் போடும் எல்லைச் சண்டைகளுக்கு குறைவே இல்லை. இன்று அவருக்கு ஆறடி நிலம் கூட இல்லை. ஆமாம் இப்போது அவர் உயிரோடு இல்லை. அப்படியானவரின் மகள் தான் இந்த கோமதி.

என்ன ஏதென்று தெரியாமல் அவளை நோக்கி நடந்தாள் சுமதி. அவள் பின்னால் மிதுசாவும் துள்ளிக்குதிச்சு ஓடிச்சென்று சுமதியின் கையை பிடித்துக்கொண்டு நின்றாள். என்ன கோமதியக்கா உதில நிக்கிறீங்கள் உள்ளுக்கு வாங்கோவன், என்றாள் சுமதி. இல்லைப்பிள்ள நாங்கள் இனிமேல் எங்கட பிள்ளைய உங்கட பள்ளிக்கூடத்துக்கு விடேல்ல நாங்கள் வேற பள்ளிக்கூடத்துக்கு விடப்போறோம் ஏனென்டால் உந்தச்சாதிப்பிள்ளயள் உங்க வந்து படிக்கேக்க எங்கட பிள்ளையையும் உங்க விடுகிறது அவ்வளவு நல்லாய் இல்லை. அவள் சொல்லிக் கொண்டு போகப்போக கல்லுச்சிலை போல நின்று கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை சுமதிக்கு. மிதுசா கேட்டாள் மதுமிதாவிடம் இனிமேல் எங்களோட நீ விளையாட வரமாட்டியே? இல்ல நீங்கள் வேற சாதியாம் அம்மா உங்களோட என்ன இனிமேல் விளையாட வேண்டாமாம். அவள் சொன்ன அந்த சாதி என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாமல் நின்றாள் மிதுசா. எல்லாத்தையும் சொல்லிவிட்டு நடந்து போய்க் கொண்டிருந்தாள் கோமதி. அவளையே வாயடைத்துபோய் பார்த்துக்கொண்டிருந்த சுமதியிடம் மிதுசா கேட்டாள் : சாதி: எண்டால் என்ன ரீச்சர்?

(முற்றும்)

# நஞ்சுண்ட குஞ்சன்

உலகத்தில பாருங்கோ தற்கொலை செயிறத்துக்கு ஆளாளுக்கு ஒவ்வொரு காரணம் இருக்கும். லவ்சு ,கடன், விசர், மானப்பிரச்சனை, மாறாத வருத்தங்கள் எண்டு கன பிரச்சனைகள் இருக்கிது கண்டியளோ? அதில முதலாவது பிரச்சனை தான் எங்கட லூசுக் ஹீரோ குஞ்சனுக்கு இருக்கிற பிரச்சனை.

குஞ்சன் வீட்டில மூண்டாவது பிள்ள, இவனுக்கு மூத்த தமையனுக்கும் தமக்கைக்கும் கலியாணம் முடிஞ்சு கன வரியம் ஆச்சு.அ துக்கிப்பிறகு தாய்க்கும் தேப்பனுக்கும் குஞ்சனைப்பற்றி யோசிக்கிறஎண்ணமே இல்ல. அவனும் பொறுத்துப் பொறுத்து பாத்தான் ஒரு அசிகிடயேம் காணேல்ல. இனி உவய நம்பி பிரயோசனம் இல்ல எண்டுவிட்டு தானே களத்தில இறங்கிவோம் எண்டு ஜோசிச்சுக்கொண்டு கோடிக்கிள்ள போய் விழுந்து முளை விட்ட பூரான் ஊமலுகள பெறிக்கிக்கொண்டு வந்து பூவரசம் குத்தியில வச்சு வெட்டி பூரான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்பத்தான், அம்மா விரதத்துக்கு சாப்பிட ரண்டு வாழை இலை வாங்கிக்கொண்டு வரட்டாம் எண்டு சொல்லிக் கொண்டு முன் வீட்டு சறோ வந்து நிண்டாள். திடுக்கிட்டு திரும்பி பாத்தான் குஞ்சன். இரட்டை பின்னல்ல இருட்டு ரிப்பன் கட்டி இளிச்சுக் கொண்டு நிண்டாள் சறோ. அடுத்த செக்கண்டே தனனம் தனனம் எண்டு புதிய வார்ப்புகள் பட மியுசிக் பிரட்டி எடுத்தது குஞ்சன்ர மனதில. அதுக்குப்பிறகு கடுகளவு காதல் கள்ளுப்பெட்டி அளவாகி வாடா போடா ஓட்டப்பல்லா போடி வாடி குட்டிப்பல்லி எண்ட அளவுக்கு வளந்துவிட்டுது.

இதுக்கிள்ள குஞ்சன்ர தேப்பனுக்கும் தாய்க்கும் லேசாய் தெரிய வந்துவிட்டுது இவயின்ர ஊஞ்சல் ஆட்டம். அவ்வளவும்தான் பிறகென்ன துவங்கினார் தேப்பன் சுப்பிரபாதம். ஒரு கட்டத்தில சொன்னார் நீ அவள மறக்காட்டி உன்ன நான் தூக்கி தலைகீழா அடிச்சு

சாக்கொண்டு போடுவன்ரா எண்டார். குஞ்சன் இதக்கேட்டுவிட்டு கொடுப்புக்கிள்ள சிரிச்சான் ஏனென்டால் குஞ்சன் தேப்பன விட சரியான உயரம். தேப்பன் கட்டையர். முதல் உவர் என்னதூக்கட்டும் பிறகு சாக்கொல்லுறதப் பற்றி யோசிக்கலாம் எண்டு நினச்சு சிரிச்சான்.

இதில பகிடி என்னண்டால் ரண்டுபேரும் குஞ்சன பேசேக்க மெதுவாதான் பேசுவினம். ஏனென்டால் முன் வீ ட்டுசறோவின்ர தாய் தேப்பனுக்கு தெரிஞ்சால் மேளுக்கு ஊக்கம் குடுத்து அவன கூட்டிக்கொண்டு எங்கயாவது ஓடடி எண்டு அவள எப்பிடியாவது தள்ளி விடப்பாப்பினம். சரி எண்டுவிட்டு குஞ்சன் இவைய சம்மதிக்க வைக்க என்ன செய்யலாம் எண்டு தன்ர பிரெஞ்சிகளிட்ட ஐடியா கேட்டான் . அவனுக்கு நெரிங்கின மூண்டு பிரென்சிகள் இருக்கினம். ஒண்டு வரதன், மற்றது பரமு, என்னுமொண்டு ரத்தினன். இதில வரதனுக்கு பழைய பிரச்சன ஒண்டில குஞ்சன பழி வாங்க நல்ல தருணம் எதிர் பாத்துக் கொண்டிருந்தவன். அந்த நேரத்திலதான் குஞ்சன் வந்து தாய் தேப்பன சம்மதிக்க வைக்க இவங்களிட்ட வந்து ஐடியா கேட்டான்.வரதன் சொன்னான்.நான் ஒரு பிளான் சொல்லுறன் மச்சான் நான் ஒரு போலுடோன் போத்தில் கொண்டுவந்து தாறன் கோடிக்கிள்ள கொண்டுபோய் எல்லாத்தையும் ஊத்திப்போட்டு கொஞ்சத்த விரலால தொட்டு நாடியிலையும் ரண்டு கன்னத்திலையும் பூசிப்போட்டு ஓடியந்து உங்கட படலைக்கிள்ள விழு மற்றத நாங்கள் பாத்துக்கொள்ளுவோம் சரியோ?

சரியெண்டு நாளும் நேரமும் கதச்சுப்பேசியாச்சு.குஞ்சன் கோடிக்கிள்ள இருந்து ஓடிவந்து படலையடியில வந்து விழுந்தான்.உடன வரதன் ஐயோ குஞ்சன் போலுடோன் குடிச்சுவிட்டான் எண்டு குளரத்துவன்கிவிட்டான் .உடன பக்கத்து வீ ட்டுசனங்கள் எல்லாம் ஓடி வந்துவிட்டினம்.ரத்தினன் சொன்னான் ஒரு ஆள் ஓடிப்போய் தேங்காய் எண்ணை கொண்டுவாருங்கோ, என்னுமொரு ஆள் தேங்காயை உடைச்சு துருவிங்கோ தேங்காய் பால்

பருக்கினால் சத்திஎடுக்க வைக்கலாம் எண்டு சொல்ல,தேப்பன் உவன் என்ற பிள்ளை இல்லை உவன சாகவிடுங்கோ எண்டு சத்தம் போட,தாய் ஐயோ என்ற பிள்ள போலுடோல் குடிச்சுவிட்டான் எண்டு குளறிக் கொண்டிருக்க, அப்பதான் வரதன் சொன்னான் ஒராள் ஓடிப்போய் மாட்டுச்சாணி அள்ளிக்கொண்டு வாங்கோ கரைச்சு பருக்கினால் சத்தி எடுப்பன் எண்டு சொல்ல,குஞ்சனுக்கு பகீர் எண்டு போச்சு. உண்மேல சாணி கரைச்சு பருக்கிப்போடுவன்களோ? எண்டு பயந்துபோனான் .அவன் பயந்த மாதிரி பரமு அவன்ர வாய துறந்து பிடிக்க வரதன் சட்டியோட சாணிதண்ணிய குஞ்சன்ர வாய்க்கிள்ள ஊத்த,குஞ்சனால தாக்குப்பிடிக்க முடியாமல் ரண்டு மூண்டு முறடு குடிச்சே விட்டான் .வரதன் அவன பழி வாங்கின சந்தோசத்தில அவன ஒரு நக்கல் பார்வ பாத்தான்.குஞ்சன் எழும்பி அவுக்,அவுக்கெண்டு சத்தி எடுத்துப்போட்டு வரதன அப்பாவி மாதிரிப்பாத்தான்.வரதன் சொன்னான்,ஏன்ரா போலுடோல் குடிக்கிற மாதிரி நடிக்கிறதெண்டு சொல்லிப்போட்டு உண்மேல குடிச்சுவிட்ட என்னடா?எண்டு கேட்டதுதான் குஞ்சன்ர தலையில இடி விழுந்த மாதிரி இருந்திச்சு.

கடசியா தாய் தேப்பன ஏமாத்த நினச்ச குஞ்சன் தானே ஏமாந்த கதை இதுதான். இருந்தாலும் பிறகு அவன் சறோவை கலியாணம் செய்து மூண்டு பிள்ளையள் பெத்து,அதுகள வெளிநாட்டுக்கு அனுப்பி கலியாணமும் செய்து வச்சு, பேரப்பிள்ளயளையும் கண்டுவிட்டினம்.

# புதுக்கவிதை:

## கைதடியிலிருந்து கடிதமொன்று - மனோகரன் கந்தையா.

*காலையில் தாமரை முல்லை மொட்டவிழ்த்து மலர மறந்தாலும் பொறுத்திடலாம்
*காலைக்கதிரவன் உதித்து உலகெல்லாம் ஒளிவீ சமறந்தாலும் பொறுத்திடலாம்
*நாளை மாலை PAAL நிலா எறித்து பட்டொளி வீ சுமறந்தாலும் பொறுத்திடலாம்

*என் செல்ல மகனே நீ என்னை பார்த்திட வர மறந்தால் பொறுத்திடாது என் மனம்
*அன்று நீ பாலகனாய் இருந்த போள் அவள் பாவி உன் அம்மாவும்
*உன்னையும் என்னையும் தவிக்க விட்டுபரலோகம் போய்விட்டாள்.
*அன்று நான் பட்ட வேதனையை நீ அறியாயடா என் ANPU மகனே
*உன் அப்பாச்சியின் அரவணைப்பில் குறை இன்றி நீ வளர்ந்தாய்
*நானோ வெளிப்புலம் ,இடையன் புலம் ,SAANTHAI வயல் வெளி எங்கும்
*நானறிந்த தொழிலாம் கூலி தொழில் செய்து UNAI வளர்த்தேன்

* வடலிஅடைப்பில் வேலி அடைப்பு ,வீ ட்டுமேச்சல் மற்றும்
*சில்லாலை பக்கம் ஓலை வெட்டு ,கொழுந்து கட்டு ,அருவி வெட்டு
*இன்னும் பட் பல தொழில்களை செய்து உன்னை படிக்க வைத்தேன்
*நீயும் பல் கலைகள் பயின்று பயன் தரு தென்னை போல் வளர்ந்தாய்.
*அவனவன் காலை பிடிச்சு கையை பிடிச்சு பல்லிளித்து ஈற்றில்

கவுன்மேந்து வேலை ஒன்றில் உன்னை கொண்டு போய் சேர்த்தனடா
அந்தோ பரிதாபம் . நாடு குழம்பியது .அல்லோல கல்லோல பட்டது கொய்யோ
முறையோ என்று சனம் எல்லாம் பதை பதைக் ஊரில் காட்டு வெள்ளம் போல்
இளசுகள் வெளி நாடு படை எடுப்பு
நான் கை கட்டி வேடிக்கை பார்த்து நிக்கவில்லையடா என்மகனே
உன் கொம்மாவின் அந்த செருக்கல்புல இரண்டு பரப்பு காணியை வித்தேன் .
உன் பெயரில் வங்கியில் வைப்பிலிட்ட ஐம்பதினாய்ரத்தை மீளபெற்றேன்
ஏனைய எல்லாத்தையும் அரிச்சு ,வழிச்சு,துடைச்சு எடுத்து சேர்த்து எடுத்து
என் செல்ல மகனாம் உன்னை இத்தாலிக்கு அனுப்பி வைச்சேனடா.
போனதும் போனாய் .ஒரு கடதாசியும் இல்லை வயரில் பேசியதும் இல்லை
கொப்பன் இருக்கிறானோ ,திண்டானோ குடிச்சானோ,படுத்தானோ நீ அறியாய்
நீண்ட நாட்களின் பின் உன் நண்பன் சச்சியின் அறிவுரை கிடைக்க
நீ என்னை கொண்டு போய் கைதடி வயோதிபர் மடத்தில் சேர்த்தாய் .

பாவி நான் கைதடியில் இப்போ கைத்தடியுடன் தான் உலா வருகிறேன்
கொஞ்ச நாளிலில் இடிவிழுந்தது போல் ஒரு சேதி கேட்டேன் .
இருந்தும் நீ அங்கு வெள்ளை தோலில் மயங்கி வீ ழ்ந்துவிவாகரத்து வரை
அதையும் என்ரை நவாலி நன் மச்சான் நவரத்தினம் சொல்ல கேள்வி
அது உன்றை தலை விதி ஆக்கும் .இது என்ரை தலை விதி மகனே
ஊர் கோவில் திருவிழாவுக்கு ஊர் முழுக்க படை எடுத்த வெளிநாட்டு வாசிகள்
உன்கூட்டாளிகளின் பெண்டில் பிள்ளைகள் என்னை பார்க்க வந்தனர்.
என்னை பார்த்து குசலம் விசாரிச்சு விசுக்கோத்து கேக் எல்லாம் தந்தார்கள் .
நீ கொடுத்து அனுப்பிய டீ சேட்டையும் தந்தினமடா .என் உடலே
இப்போ இளைத்து ஒரு டீ சேட்டுமாதிரி தொங்குதடா என்மகனே
ஒரு டீ சேடடுக்கு மேலை இன்னொரு டீ சேட்டை ஏன் போட வேணுமெண்டு
என் பக்கத்து கட்டில் பரமசிவத்துக்கு அன்பளிப்பாய் கொடுத்துவிட்டேன்
என்ன இருந்தும் நீ வந்து ஒருமுறையாவது எனை பார்ப்பது போல் வருமாடா

இங்கு அனைத்து வசதி வாய்ப்புக்கள் எல்லாம் உண்டடா என் தங்க மகனே

நல்ல ருசியான சத்தான சாப்பாடுகள் .எனக்கு ஒரு ருசியும் தெரியுதில்லை
தொலைக்காட்ச்சி ,விளையாட்டுகள்
,பொழுதுபோக்குகள் ஒண்டிலையும் லயிப்பில்லை
சிலவேளை உயிரை மாய்த்துவிடலாம் எண்டு அரளிகொட்டை தேடினால்
கண்ணுக்கெட்டிய தூரம் எல்லாம் பூமரம் மாமரம் வாகை மரங்களே.தெரிகிறது
அண்மையில் தெல்லிபலையில் இருந்து மூண்டு டாக்குத்தர்மார் வந்தினம்
முழுப்பேரையும் சோதிச்சு முப்பத்திமூண்டு பேருக்கு , நானுட்பட
எதோ தேப்றேசராம் மனஅழுத்தம் எண்ட வருத்தமாம்
நான் பெற்ற என் செல்வமே நான் கண்களை மூடி உன் கொம்மாவுடன் சேரமுன்
என்னை ஒருக்கா வந்து பார்த்து கதைச்சாய் எண்டால்
நான் நின்மதியாய் ,சந்தோசமாய் கண்களை மூடுவேனடா என் தங்க மகனே
எனக்கு விளங்குகிறது உனக்கு எவ்வளவு பிரச்சனைகள் அங்கு என்று
வேலை ,பெண்டில் பிள்ளை ,அதுகும் வெள்ளைகார ஆக்கலள்ளே ?.

ஆக்கம்: மனோகரன் கந்தையா

# பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கருங்கல்லு

எங்கடை சண்முராசா வாத்தியாரும் மனிசி தங்கமும் வெளிநாட்டாலை போகினம் எங்கு போவது அறியாது போகின்றார்கள். நீங்க ஒரு வேளை நினைப்பியள் உவர் கனடாவிலை இருந்து விசிற்றா வந்தவர் எண்டு இல்லைப்பாருங்கோ உவற்றை மூண்டு பிள்ளையளும் கனடாவில் தான் உவை தான் பாருங்கோ விசிற்று போவுட்டு வருகினம்.சண்முகத்தாரும் மனிசியும் ஏதோ கவலையோடு போகினம் எண்டு மட்டும் தெரியுது.அவை றோட்டிலை நடக்கினமே ஒளிய எண்ணம் முளுக்க கனடாவிலை. அதாலை வந்த மயிலன்ரை ஆட்டோ தங்கத்தை மோதி விளுந்துவிட்டா.மயிலரும் பயந்து ஆட்டோவை நிப்பாட்டி ஐயா பாத்து வரப்படாதே என கேட்டபடி தூக்குங்கோ ஆசுபத்திரிக்கு போவம் எண்டு சங்கானை க்கு போக அவை அடிபட்ட கேசு பொலிசாலை வாருங்கோ என அவர்கள் நாகநாதனிட்டை போவம் எண்டு போய் மறிச்சாச்சு.அது காசு ஆசுபத்திரி எண்டு தெரிஞ்சும் மயிலர் வைத்தியத்தை செய்ய ஆரம்பிச்சா தெரியம் தானே எல்லா பரிசோதனையும் செய்து போட்டு அது ஒரு சின்னமயக்கம் தான் ஒரு குளுக்கோசை ஏத்தினாச்சரி எண்டு பில்லை கட்டும் எண்டா மயிலர் அன்றாடம் காட்ச்சி என்ன ஏது என பில்லைபாத்து எவ்வளவு என சண்முகராசு வாத்தியார் பாத்துவிட்டு தம்பி 35.000ரூபா என அவன் ஏங்கிப்போனான்.ஐயா உங்களிட்டை ஏதும் கையிலை காசு கிடக்கே ஐயா.இல்லைத்தம்பி ஒரு ஆயிரமோ, இரண்டாயிரம் தான் கிடக்கும் எண்டார் வாத்தியார்.என்னய்யா நான் எங்கை போறது உங்களுக்கு கண் தெரியாமல் என்ரை ஆட்டோவே கிடைச்சது என கொஞ்சம் கோபமாய் திட்டிப்போட்டார் மயிலர்.மயிலர் ஐயா கொஞ்சம் பொறுங்கோ வீட்டை போய் மனிசியின்ரை நகையைவித்தாதல் கட்டுவோம் என கூறி வீட்டைவந்து

மனிசியின்ரை தோட்டை களட்டியந்து வித்தப்போட்டு கட்டிப்போட்டான். ஐயா வீ ட்டைவாருங்கோ கொண்டேய் விடுறன். இல்லை தம்பி எனரை வீ ட்டை என்ரை மேள் வித்தப்போட்டாள் என மயிலன் இப்ப என்ன என்ரைவீ ட்டை போவோம் வாருங்கோவன் என கேட்க்க.தம்பி நீங்கள் எங்கடை ஊரிலை.இல்லை ஐயா நான் சாவச்சேரி உங்கடை ஊரிலை காலையடிக்கை இருக்கிறன் நீங்கள். என்ன தம்பி நீங்கள் கிட்டடியிலையோ ஊருக்கு வந்தநீங்கள் ஓம் இரண்டு மாதம் தான்.அதுதான் உங்களுக்கு என்னை தெரியாது நான் தம்பி நான் முன்னாள் ஆசிரியர் பண்டத்தெருப்பிலை படிப்பிச்சனான்.நானும் பணிப்புலம் இல்லை முந்தி கிளிநொச்சியிலை படிப்பிச்சனான் என்ரை ஊரும் அதுதான்.சரி வாத்தியார் மெள்ள அம்மாவை பிடிச்சு ஏத்துங்கோ ஐயா.ஆட்டோவை ஓட்டியபடி வாத்தியார் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ நீங்கள் ஆரெண்டு தெரியாமல் கண்டபடி பேசிப்போட்டன்.இல்லை தம்பி அது எங்களிலை தானே பிழை ராசா பறவாயில்லை. ஐயா மெள்ள இறங்குங்கோ பாத்து எடியே பார்வதி இஞ்சைவாடி ஆர் வந்தவை எண்டு பாரடி.வாருங்கோ அம்மா மெள்ள எப்பிடி இப்ப சுகமோ,ஓமடி பிள்ளை.வாருங்கோ ஐயா உள்ளுக்கை வாருங்கோ.பார்வதி ஐயாவுக்கும் அம்மாவுக்கும் சாப்பாட்டை எடடி.இல்லைத்தம்பி பயண அலுப்பு ஒருக்காய் கை கால் அலம்பிப்போட்டு சாப்பிடலாம்.ஐயா வாருங்கோ கிணத்தடி இதுதான் பொறுங்கோ தண்ணி அள்ளித்தாறன். வேண்டாம் தம்பி இது என்ன நான் அலம்பிப்போட்டுவாறன் போ தம்பி. பார்வதி சாப்பாடு போடுறியே. என்ன கத்தாமல் இஞ்சை வாருங்கோ.என்னடி.சாப்பாடு காணாது என்னடி நீ உது எங்களுக்கு புதிசே வந்தவையை கவனி எங்களைப்பற்றி பிறகு பாப்பம்.ஐயா, அம்மா இருங்கோ சாப்பிடுவோம் என பரிமாற வாத்தியார் ஏன் தம்பி இருமன் சாப்பிடுவோம் ஒரேதாய்.இல்லை ஐயா நான் குளிச்சுவிட்டு சாப்பிடுறன்.சரி தம்பி என சாப்பிட்டவர்களை

படுக்கைக்கு விட்டார்கள் நாளைக்கு கதைப்போம். வாத்தியார் படுக்கைக்கு சென்றவர் எடியே தங்கம் உந்தப்பிள்ளை எங்களாலை நல்லாய் கஸ்டப்பட்டுப்போச்சுதுகளடி.ஓமப்பா என்னண்டாலும் செய்யவேணும். சரி படடி விடிய யோசிப்போம் என கூறியபடி தன்ரை பிள்ளையளை நினைத்தபடி அயந்து போனார். சண்முகத்தார் நினைவு கனவாக கனடாவில் பிள்ளைகள் வீ ட்டை பறக்கிறது. இவருக்கு மூண்டு பிள்ளையள் மூத்தவன் சங்கரன், இரண்டாவது ஐங்கரன், மூண்டாவது மகள் மல்லிகா. மூண்டுபேரும்

கனடாவிலை குடும்பமாய் இருக்கினம். மூத்தவன் விசிற் விசாவுக்கு போட்டு கூப்பிட்டவன்.மூத்தவன் வீ ட்டை போய் ஒரு கிழமை ஏதோ ஒரு இருட்றைக்குள்ளை தான் இருந்தனாங்கள் மற்றப் பிள்ளையள் போன அண்டு வந்து பாத்தவை பிறகு ஒருத்தரையும் காணேல்லை.மகனையும் குடும்பத்தையும் சந்திக்க சந்தர்ப்பம் கிடையாது.பேரன்,பேத்தியோட கதைப்பம் எண்டால் தஸ் புஸ் எண்டு தமிங்கிலத்திலை கதைக்குதகள் எனக்கு விங்குது உவள் தங்கம் பாவம் ஒரு மண்ணும் விளங்காமல் இருக்கிறாள். பிள்ளையள் இரண்டும் கெட்ட கலாச்சாரங்கள். மற்றப்பேரப்பிள்ளையளும் இந்தக்கோலம் தான்.ஏன் வந்தோம் எண்ட கவலையோட பத்து நாள் ஏதோ பத்து மாதம் மாதிரி போனது தங்கத்துக்கும் உந்த பேஸ்மன் றூம் ஒத்து வரேல்லை நெடுக நெஞ்சுக்கை நோவெண்டபடி.அண்டைக்கு சனிக்கிழமை லீவு நாள் மூத்தவன் நிப்பன் எண்டு காலைமை தேடினா அவனையும் காணேல்லை மருமேளையும் காணேல்லை.சரி எங்கேயோ வெளியிலை போனவை வரட்டுக்கெண்டு பாத்து பாத்து இருண்டே போச்சுது.தங்கம் வாடி படுப்பம் நாளைக்கு பார்க்கலாம் என படுக்கப்போனவர் சிறு நேரத்தில் மனைவி என்னப்பா நெஞ்சுக்கை நல்லாய் குத்துது என்ன செய்யிறது பொறப்பா வாறன் தம்பிக்கு ரெலிபோன் அடிச்சுப்பாக்கிறன் எண்டு அடிக்க அவன் எடுக்கவே இல்லை அவையும் பதில் இல்லை. எல்லாம் எங்கடை

விதியெண்டபடி மேலை ஏதோ சத்தம் கேட்டதாலை மேலை ஏறி பாட்டுச்சத்தம் கேட்க்க எட பேரன் நிக்கிறான் எண்டு அவன்ரை றூம் கதவை தட்டினால் அவன் உள்ளிருந்த பாட்டை குறைச்சவன் கதவை துறக்க பேரா பாட்டிக்கு ஏலாது ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக வேணும் வா ராசா எண்டபடி றூமை பார்த்த சண்முகத்தார் ஏங்கிப்போனார் கொஞ்ச இளசுப் பெண்களும், ஆண்களுமாய் கையிலை மதுவும் மாதுவமாய் நிக்க மனிசியின்ரை வருத்தத்தைவிட பேரனரை கோலத்தைப்பாத்த கோவம் அவனை அடிக்க கை ஓங்க அவன் அவரின்ரை கையை மடக்கி கன்றி புறூட் என பேசியபடி வெளியில் தள்ளி கதவை சாத்தினான்.அவர் அந்த கவலையுடன் கீழே இறங்க மூத்தவன் தள்ளாடியபடி வீ ட்டுக்குள் நுளைகிறான் எடே கொம்மாவுக்கு வருத்தமடா எண்டு சொல்ல விடியப்பாக்கலாம் எண்டபடி அவன் போக பின்னாலை மருமகளும் அதே தள்ளாட்டத்தோடு வாறாள். பேத்தி நில்லம்மா ஒருக்காய் வா பாட்டியை ஆஸ்பத்திரிக்குப் போவம்.தாத்தா நான் றைவ் பண்ணேலாது பொறுங்கோ அம்புலன்ஸ் வரும் கொண்டு போங்கோ என எடி பிள்ளை உங்கடை அத்தைக்கும் அடிச்சு அங்கை வரச்சொல்லு யா யா. இவர் அம்புலன்ஸ் வந்து கொண்டுபோக மகளும் அங்கு வந்து மனைவிக்கு மருந்துகளும் கொடுத்துள்ளனர்.மகள் தங்கடை வீ ட்டைபோவம் நாளைக்கு உடுப்புகளை எடுக்கலாம் எண்டு மகள் கூட்டிசென்றாள்.

அங்கையும் அப்படியும் இப்படியுமாய் காலம் ஓட மூத்தவன் குடும்பம் எட்டியும் பாக்கேல்லை. அடுத்ததும் வந்தண்டு கண்டதுக்கு பிறகு காணவே இல்லை.எடியே பிள்ளை ஐங்கரன்ரை வீ ட்டைஒருக்காய் வரச்சொல்லு

இல்லாட்டி நாங்கள் ஒருக்காய் போவோம் பிள்ளை. ஐங்கரன் அண்ணை கனடாவிலை இல்லை அப்பா அவை அவுஸ்ரேலியாவுக்கு வக்கேசன் போவிட்டினம்.ஏன்ரி பிள்ளை

கூப்பிட்டனீங்கள் நாங்கள் அங்கை நிம்மதியா இருந்திருப்போமெல்லே. அப்பா இஞ்சை அசெலம் கேட்டா உங்களுக்கு வெல்வெயர் கிடைக்குமெல்லோ. எடியே பிள்ளை எங்கடை உயிர் என்ரை மண்ணிலை தான் போகவேணும். அப்பா ஊரிலை எங்கைபோய் இருக்கப்போறியள். ஏன்ரி பிள்ளை உனக்கு தந்த சீதணவீ டு கிளிநொச்சிலை கிடக்கெல்லே. இல்லை அப்பா அதை வித்துப்போட்டம் நாங்கள்.எப்ப ஏன் எனக்கும் ஒருக்காய் சொல்லாதையன்.சரி சரி உங்கடை நாடு இதெண்டா நீங்க இருங்கோ நான் இருந்த பணிப்புலத்திலை போய் இருக்கிறன். அந்தவீ டு விட்டுவிட்டியள் எண்டியள் ஓமடி பிள்ளை அது நான் விட்டது இஞ்சத்தையாலை கிளிநொச்சி வீ ட்டிலைஇருக்கவெல்லே சரி விடு எனக்கெண்டு ஒரு இடம் இல்லாமல் போகாது நான் ஊருக்கு போற அலுவலைப்பார். நான் ரிக்கற்றை புக் பண்ணிவிடுறன்.நான் வராமல் இருந்திருக்கலாம் ஏனெண்டா— உங்களை பாக்கவந்து நல்ல பாடம் படிச்சுத்தந்தநீங்கள். நானடி பலபேரை படிப்பிச்சனான் என்ரை பிள்ளையள் எனக்கும் மனிசிக்கும் நல்லபாடம் படிப்பிச்சுப்போட்டியள்.சண்முகத்தார் திடீரென எழும்பினவர் தண்ணியை மடக்மடக்கென குடித்தவர் திரும்பி படுக்க கோழி கூவ தன்னை சுதாகரித்துக்கொண்ட எழும்படி தங்கம் என எழுப்பினார். மயிலு, மயிலு என ஒரு குரல் கேட்க்க மயிலர் எழும்பி ஆரெண்டு பார்த்தால் ஆட்டோக்காசு கட்டாததுக்கு வந்துவிட்டனர்.தன்னை சுதாகரித்து மயிலர் அவர்களோடு வாக்குவாதப்பட இதை அவதானித்த வாத்தியார் தம்பி மயிலு இஞ்சை வா எனக்கூப்பிட்டு என்ரை மனிசியிடம் இருக்கிற நகை வித்துப்போட்டு குடு ராசா பிறகு கதைப்போம்.தம்பி நீ எனக்கு செய்த உதவிக்கு இது ஒரு சிறு துளி என நகை கொடுத்தார்.அதை வாங்கிய மயிலர் கண்கலங்க ஐயா நன்றி என பலதடவை சொன்னபடி நிக்க தம்பி முதல்லை உந்த அலுவலைப்பார்.

தங்கம் இரவு நீ பட்ட கவலைக்கு உதவிசெய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுது சந்தோசம்.எடியே உந்த பண்டத்தருப்பு வளவை அரைவாசிவித்து வீ டு ஒண்டைகட்டி இந்த மயிலன் குடும்பத்தோட இருப்போம் எங்களுக்கு பின்னாலை இந்தப் பிள்ளைக்கே எழுதலாம்.ஓமப்பா என கூறினா தங்கம். மயிலருக்கும் நல்ல உதவி வாத்தியார் அதே போல வாத்தியாருக்கு நல்ல உதவி.வாத்தியார் பென்சன் எடுத்து மயிலருக்கு கொடுக்கிறதுதான் வளமை.இப்படியே இருகுடும்பமும் வாத்தியார் வளவுக்கை வீ ட்டைக்கட்டி குடிபோனவர்களுக்கு ஒரு சந்தோசமான செய்தி மயிலனும் அப்பா ஆகப்போறார். பிள்ளை வந்த காலம் மயிலருக்கு ஒரு நல்லகாலம் பிறந்தது.ஆனால் வாத்தியாற்றை கோவம் அடங்கவில்லை.தங்கம் நானோ நீயோ செத்தா கொள்ளிவைக்கிறது மயிலன் தானடி எங்களுக்கு பிள்ளை அவன் தானடி.

"கல்வி கற்றவன் பட்டதாரியாகலாம் பட்டப்படிப்பு மனிதாபிமானமாகாது". கல்வி கற்காதவன் பட்டம் பெறமாட்டான் ஆனால் அவனது மனிதாபிமானத்துக்கு முன் பட்டங்களை பறக்கவிடுங்கள்"

பண் த.பாலாவின் கன்னி முயற்ச்சி

# மனைவியை அடிப்பது எப்படி?

எல்லாற்ற வீ ட்டிலையும்மனிசனுக்கும் மனிசிக்கும் இடையில சண்டைகள் வாறது சாதாரண விஷயம் தான் பாருங்கோ,எவையும் வந்து நாங்கள் கலியாணம் செய்தவாதொடக்கம் சண்டையே பிடிச்சதில்லை எண்டு சொல்லமுடியாது. அப்பிடி எங்கினேன் ஆயிரத்தில் ஒண்டு இருந்தாலும் அதை பெரிய அதிசயமாய்

பாத்துவிடாதையுங்கோ. அதுக்கு காரணம் அந்த வீ ட்டிலஆரோ ஒரு ஆள் அடிமையாய் இருக்கிது எண்டு தான் அர்த்தம்.

எனக்கு தெரிஞ்சு ஊரில பல வரியங்களுக்கு முதல் ஒருத்தர் ,அவருக்கு எங்கட குலத்தொழில்தான் தொழில் கண்டியளே,அவற்ற வீ ட்டிலஎப்ப பாத்தாலும் ஒரே மேளச்சமாதானுங்கோ தொழிலால வரேக்கையே காயாபனையடியால தான் வருவர்.அப்பிடியே தண்ணிபந்தல்ல இரண்டு மூண்டு போத்தில் பனைமோர் சாப்பிட்டுவிடுத்தானுங்கோ வருவர். இப்பிடி ஒரு நாள் அவர் வரேக்க மனிசி முத்தத்தில நிண்டு கொண்டே எங்கட ஊர் தேசிய கீதம் பாடத்துவங்கிவிடுவபாருங்கோ செந்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொத்துப்போவாவுங்கோ.அவரும் சளச்சவர் இல்ல எதிர்த்து இங்கிலீசே பேசுவர் பாருங்கோ அப்பிடி ஒரு இங்கிலீசு. இப்பிடியே பேசிப்பேசி அவரை அவா இழுத்துக்கொண்டு அடுப்படிகிள்ள கொண்டுபோய் இருத்தி சாப்பாடு போடத்துவங்கிவிடுவா . அவர் சோத்துக்கிள்ள கை வைக்கிற நேரம் பாத்து அவா விட்ட குறை தொட்டகுறையாய் மிச்சமிருக்கிற தேசியகீதத்தை பாடத்துடங்கிவிடுவா அவ்வளவுதான் சோத்துக்கிள்ள போன அவற்ற கை றிவேஸ் அடிச்சுக்கொண்டு வந்து கறிச்சட்டிக்கிள்ள இருந்த அகப்பையை தூக்கும் ,அடுத்த செக்கன்ட் அகப்பை காம்பு அவற்ற கையில இருக்கும் அதில கொழுவி இருந்த சிரட்டை விண் கூவிக்கொண்டு வெளியில பறக்கும்.இத்தனைக்கும் ஒரு வாய் சோத்துக்கு நாக்கை தொங்கப்போட்டுக்கொண்டு நிண்டது நாதர் வீ ட்டு நாய்.அது இவ ரண்டுபேரும் போட்ட சண்டையில கீச்சிட்டுக்கொண்டு சீனிபனை பக்கமாய் ஓடிவிடும்.கொஞ்ச நேரத்தால அவா வெளியில வருவா சட்டிக்கிள்ள கிடந்த குழம்பு இவவின்ர தலையில இருக்கும் இப்பத்தே இளசுகள் தலைக்கு பெயின்ட் அடிச்சமாதிரி.பிறகு கறிச்சடடி எங்க இருக்கும் எண்டு கேக்கேல்ல? பாதிச்சட்டி சொத்துப்பானக்கிள்ளையும் மற்றப்பாதி அடுப்புக்கிள்ளையும் கிடக்கும். இவ்வளவும் நடந்து ஓடி ஆடி ஓஞ்சு

அண்டையான் பொழுது ஒரு மாதிரி விடிஞ்சுபோம்.

ஆனால் அதிசயம் என்னண்டாலுங்கோ, முதல்நாள் பொழுதுபட உவ்வளவு சண்டை பிடிச்ச தம்பதிகள் விடிஞ்சாப்பிறகு அவ்வளவு அந்நியோன்னியமாய் இருப்பினம் பாருங்கோ, அவர் முகம் கழுவி நாலுமுழம் கட்டிக்கொண்டு அதுக்கேத்த சால்வையும் தோள்ல போட்டுக்கொண்டு உத்தியோகத்துக்கு போக தயாராகிக்கொண்டிருப்பர்.அவா ஒரு பெரிய மூக்குப்பேணியில பால்த்தேத்தண்ணியை கொண்டுவந்து குடுப்பா,இடைக்கிடை கதைபேச்சும் நடக்கும். இவ்வளவையும் பாத்துக்கொண்டிருந்த எனக்கு ஒரே ஆச்சரியம் பாருங்கோ.ஒரு இரவுக்கிள்ள அப்பிடி என்னதான் நடந்தது எண்டு எப்பிடியும் உந்த ஆளிட்ட கேட்டுவிட வேணும் எண்டு ஆள் படலையை விட்டு றோட்டுக்கு வந்த உடன போய் பிடிச்சுப்போட்டன்,நீங்கள் ரண்டு பேரும் நேற்று போட்ட மேளச்சமாவை உந்த அயல் அட்டை சனம் முழுக்க பாத்துக்கொண்டுதான் இருந்தது ஆனால் விடிய ரண்டுபேரும் சந்தோசமாய் கதைச்சு பேசின்னிங்கள் அந்த ரகசியத்த எனக்கு இப்ப ஒருக்கா சொல்லிப்போட்டு போங்கோ எண்டு பிடிச்ச பிடியில நிண்டன். அது ஒண்டுமில்லையடா தம்பி எவ்வளவுக்கு எங்களுக்குள்ள சண்டசச்சரவு நடக்கிதோ அவ்வளவுக்கு அவ்வளவு எங்களுக்கு அன்னியோன்னியமும் இருக்கடா தம்பி.நான் செய்தது பிழைதான் எண்டு எப்ப எனக்கு விளங்கிச்சோ ?உடன நான் என்ற மனிசியின்ர கால்ல விழுந்து மன்னிப்பு கேக்க தயங்க மாட்டன்ரா தம்பி.அவளும் என்ன விளங்கிக்கொண்டவள் மாதிரி,நானும் உங்கள அப்பிடி பெசியிருக்கப்படாதுதானுங்கோ எண்டு அவளும் பணிஞ்சு வரேக்க எங்களுக்கில்ல ஒரு சந்தோசம் பிறக்கும் பாற்றா அப்பிடி ஒரு சந்தோசம்.மற்றவை பாக்கினம் எண்டு பாத்தால் வாழமுடியாதடா தம்பி அகப்பையால அடிச்ச நான் தான் அவளை அன்பாலயும் அடிச்சனான் எண்டு சொல்லிப்போட்டு மளமளவெண்டு தொழில் நோக்கி போய்க்கொண்டிருந்தார். சண்டையையும்

சந்தோசத்தையும் சரி சமமாக பகிர்ந்துகொண்டிருக்கும் அந்த தம்பதியை பாக்க எனக்கு ஒரு பல்கலைகழகம் போல் தோன்றினார்கள். நாகரீககாலத்து வாழ்க்கை என்று சொல்லி முன்கூட்டியே பேசிவைத்துக்கொண்டு வாழ்க்கையை ஆரம்பித்து நாலே மாசத்தில் வழக்காடுமன்றம் செல்பவர்களை விட இத்தம்பதியினர் எவ்வளவோ மேல்.

## யார் விட்ட தவறு?

ஒரு உண்மைக் கதை இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்பு நாம் புலம்பெயர்ந்து வந்தோம். அன்று நம் பெற்றோர்கள் நம்மை இங்கு அனுப்புவதற்கு எதை எல்லாம் விற்ரோ அல்லது அடைவு வைத்தோ ஈடு வைத்தோதான் அனுப்பி வைத்தார்கள் இதை யாரும் மறுக்க முடியாத உண்மை.ஆனால் இனிவரும் சம்பவம் ஓரு உண்மை சம்பவம். ஒரு நண்பர் இப்படி இங்கு தன் புலம்பெயர் வாழ்க்கை புதுமணதம்பதிகளாய் ஒரு சிலவருடவாழ்க்கை வாழ, வந்த கடனை மறந்து போய்க் கொண்டு இருக்கையில். அங்கு பெற்றோருக்கு கடன் கொடுத்தவர் அவர்களின் கழுத்தில கத்தியுடன். பெற்றோர் பிள்ளையிடம் பணம் அனுப்பும் படி பல தடவை கடிதங்கள் ஏழுத, தொலைபேசி அழைப்புக்கள் செய்தும். பணமும் செல்லவில்லை அதோடு பிள்ளை தொல்லைபேசி இலக்கத்தை மாற்றிவிட்டார். ஆனால் அங்கு பெற்றோர் அன்றாட வாழ்கை படு திண்டாட்டம் அதோடு பிள்ளை வெளிநாடு அனுப்பி வைத்த கடன் இவர் குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை நான்கு அதே போன்று கடன்தொகையும் நான்கு மடங்கானது. அங்கு பிள்ளையின் தகப்பனார் மனனோயாளியாக போய் இறந்துபோனார்..

இனித்தான் சுவாராசியம். இவரின் அப்பா இறந்துவிட்டார் என்று உறவினர், நண்பர்கள் என இவருடைய வீடு ஒரே சோகமயம் ஆனால் இவர் வெளிநாடு வந்தகடன் இன்னும்

தீரவில்லையாம். இதற்குள் 31ம் நாள் குருக்களை கூப்பிட்டு திரிசெய்கிறார் ஆனால் வந்தகடன் தீராமல் அவர் அம்மாவின் பூ பொட்டு இளக்கப் பணியபிள்ளை அப்பாவிற்கு ஒரு பல ஆ.....யிரம் செலவில் நினைவுமலர் வெளியிட்டார் ஆனால் கடன்இன்னும் அடைபடவில்லை. அந்த அம்மாவின் தாலி விற்றும் கணவனின் காப்புறுதி பணமும் தான் கடனைஅடைத்தது.. இப்போது பலரின் நடவடிக்கைகள் வாழும்போது பெற்றோரை கவனிக்காமல் இருந்துவிட்டு பெற்றோரின் மரணவீ டு என்ற உடன் பல ஆயிரம்செலவு செய்கிறார்கள் மூன்றாம் நாள் செலவு என்ற பெயரில் தங்களுக்கு விருப்பமான உணவு பல வித மதுபானங்களுடன் நல்லொரு அன்பு என மற்றவர் புகழ ஒரு சினிமா காட்டுகினம். ஏன் இந்தபோலிவாழ்கை. இறந்தபின் இவ்வளவு செலவும் உடனடியாக செய்யமுடிகிறது என்றால் ஏன் எங்களால் பெற்றோரின் முதுமைகாலம் பிரகாசமானதாக இருக்கவைக்க முடியாது. இக்கருத்து யார் பெற்றோரை கவனிக்காமல் இறந்தபின் கிரிகைமூலம் சினிமாகாட்டினார்களோ அல்லது இப்படி சினிமா ஓட ஓட்ட நினைப்பவர்களுக் மட்டுமே.எனக்கு தெரிந்து அன்பு பாசமான பிள்ளைகள் உண்டு இக்கருத்து உங்களுக்கு அல்ல. நான் கருத்தில் கொண்ட விடயம் நம் புலம்பெயர்சமுதாயத்தில் இன்றும் நடைபெற்ற வண்ணம் உள்ளது இதை யாரும் மறுக்க முடியாது.
பண் த.பாலா

விவாகரத்து இன்று எச்.ஐ.வி நோயைவிட மோசமான நிலைக்கு போவது ஏன்? 1940 களில் திருமணபந்தம் எப்படி இருந்தது என ஒரு சிறு பார்வையிடன் தொடங்கலாம். அன்றைய திருமணங்கள் ஒரு பால்யபருவ திருமணங்களாகவே இருந்தன.13 வயதுகளிலேயே திருமணங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்களது பரம்பரைகளின் திருமண பந்தங்களை ஆராய்ந்தால் புரிந்து கொள்ளும். அன்று சிறு வயதுக்கல்யாண பந்தங்கள் பல பெண்கள் பிரசவநேரங்களில் 20 வயதுக்குள் இறந்துள்ளார்கள். இறந்த பின் அந்த பெண்ணின் தங்கையையே

மணமுடித்து வைத்துள்ளார்கள். அன்று ஒரு குடும்பத்தில் 12 பிள்ளைகள் தான் பெற்று வளத்து பரம்பரைகளாய் விரிச்சமாய் வாழ்கின்றோம். இது அன்றைய பொன்னான வாழ்க்கை ஆனால் கல்யாண வயதுகளில் நிறைய தப்புக்கள் இருந்திருக்கின்றன. விவாகரத்து என்றால் என்ன என அறியார்கள் அன்று.

70 கள் தொடக்கம் ஒரு 80 வரை பார்த்தால் பேச்சுக் கல்யாணம், காதல் கல்யாணம், என எல்லாவகையான திருமணங்களை கண்கூடாய் கண்டிருக்கின்றோம்.ஆனால் அந்தக்காலம் ஜாதி மாற்று கல்யாணங்களை எதிர்த்த காலங்கள். அதைவிட ஒதுக்கி வைத்துள்ளனர். காதல் தோல்வி தற்க்கொலைகள் கூடிய காலங்களாகும். ஆனால் கல்யாண வயது ஒழுங்கமைந்த காலங்கள்.இந்த காலத்திலேயே திருமண முறிவுகள் அதிகரித்த காலங்கள். பல முறிவுகள் பெரியோர்கள் தலையீட்டால் சேர்ந்துவாழும் பல குடும்பங்கள் இப்பவும் சந்தோசமாக வாழ்கின்றார்கள் .இந்தக்காலம் பல சமுதாயமாற்றங்களுடன் உருவான காலங்களாகும். கல்விக்கு முக்கியம் கொடுக்கப்பட்ட காலங்கள்.பலர் சகல துறைகளிலும் தொழில்புரிந்தகாலம்.இது தொடர்ந்ததா என்றால் இல்லை அரசியல் மாற்றங்கள் என பல இடையூறுகள்.

80 களுக்கு பின் புலம்பெயர்காலங்கள்.இன்று வரை புலம்பெயர்கிறார்கள். இந்தக்காலமே பலரது திருமணங்கள் 80,95ஆண்டுகளின் காலங்களில் தான் புலத்து இளைஞ்ஞர்கள் ஊரில் திருமண பந்தங்களில் இணைப்பை ஏற்ப்படுத்தியிருந்தனர். இவர்களின் திருமண வயதுகள் கூட பல குளறுபடிகளை கொண்டது. அதாவது ஆண்கள் வயதுக்கும் பெண்கள் வயதுக்கும் அரவாசி வித்தியாசத்தில் பல திருமணங்கள் நடைபெற்றன.இதற்க்கான பல காரணங்கள் தன் பிள்ளையும் வெளிநாட்டில் திருமணம் செய்யும் ஆசை,வெளிநாட்டுப்பணம், ஊர் மாப்பிளைகளை மதியாமை என பல காரணங்களுக்காக வயதை பொருட்டாக எண்ணவில்லை.

இப்படியான சில கல்யாணங்கள் விவாகரத்துக்களில் போனதும் உண்டு.அந்தக்காலத்தில் கூட திருமண பிரிவை அதிகமாய் பெரியவர்கள் ஓரளவு தலையிட்டு தீர்த்துள்ளனர்.

95 களுக்கு பின் நடைபெறும் பல திருமணங்கள் ஜாதிமதம், குணம், நடத்தை,பின்புலம், முன்யோசனை, சாஸ்த்திரம் ,சம்பிரதாயம், பெற்றவர் சம்மதம், என எதற்குமே பயப்படாத புலம்பெயர் சமுதாயமாக மாறி வருகின்றது. இன்றைய இளைஞ்ஞர்களை பொறுத்தவரை புலத்தில் பலர் தமது வாழ்க்கையை திறம்பட அமைக்கிறார்கள் என்பதில் அச்சமே இல்லாமல் கூறமுடியும். இன்றை புலத்தின் இளம் சமுதாயத்தினர் பலர் எல்லாவிதமான கல்வித்துறையிலும் முன்னேறி இருக்கின்றார்கள். என்னும் பல முன்னேற்றப் பாதையை நோக்கி வளர்ந்து செல்கிறார்கள்.

ஆனால் எமது இளம்சமுதாயம் இன்று தங்கள் வழ்க்கைப்பாதை வகுக்கும் முறைகளில் தப்புக்களும் பல இடம்பெற்று வருகின்றது.அன்று இல்லையா என கேட்பது விளங்குகின்றது இருந்தது ஆனால் மிகவும் அரிது.இன்று இளைஞ்ஞர்களின் திருமணங்கள் பல கோடிகளை கொட்டி திருமணங்களை நடத்துகின்றனர். கோடிகளை கொட்டும்போது எமது பிள்ளைகளின் திருமணம் செய்து நன்கு வாழவேண்டும் என வாழ்த்தும் பெற்றவர்கள் இவர்களது வாழ்க்கைக்கே விபரீதமாகின்றனர். புலங்களில் எம்மவர் குடும்பங்களை கணக்கீடு செய்யப்பட்டதின்படி விவாகரத்து அதிகம் நடைபெறும் நாடுகளை வ்ரிசைப்படுத்தினால் கனடா, ஜேர்மனி, நோர்வே சுவீ டன் லண்டன், டென்மார்க், பரிஸ், கொலண்ட் என தொடரும். திருமணமுறிவகள் அன்று முறிவடையாமல் இருந்தமைக்கு கூட்டுகுடும்ப வாழ்க்கைமுறை காரணம். பெரியோர்களின் தலையீடுகள் குடும்பவாழ்க்கை சுபீட்ச்சமாக சென்றதற்க்கான முக்கிய காரணிகளாகும். அன்று திருமணவிழாக்கள் சம்பிர்தாயமுறைகளை

முன்னுருமையும், உற்றவர், உறவுகள், அயலவர், நண்பர்கள் என கலகலப்பாக நடாத்தப்பட்டது.இன்றைய திருமணங்கள் தனியவே போட்டிகளாயும்,கோடிகளாயும் நடாத்தி அன்றுடன் தம்பதிகளின் வாழ்க்கையின் பிரதிபலன்கள் விவாகரத்தாய் மாறுவது ஏன் என சற்று ஆளமாய் ஆராயவேண்டியுள்ளது.

விவாகரத்துக்கள் சிலது அந்த நாட்டின் உதவிப்பணங்களை கூடப்பெறும் நோக்குடையதாய் இருக்கின்றது. இதுவே காலப்போக்கில் உண்மையான விவாகரத்துக்கள் ஆக்கப்பட்டது. இந்தச்சூழ்நிலையில் வாழும் பிள்ளைகளும் அப்படியே வாழ்க்கையை கொப்பி அடிப்பதாய் தெரிகின்றது.பிள்ளைகளின் திருமணமுறிவு ஏற்ப்படுவதற்க்கு அதிகமாக முதியவர்களே காரணமாக இருக்கிறார்கள். குடும்ப பிணக்குகள் அவர்களே தீர்ப்பது உகந்தது.முடியாக்கட்டத்தில் பெரிவர்களை நாடலாம் ஆனால் பெரிவரகள் தீர்ப்பை நோக்கினால் வாடி(வாடா) என பிரிப்பதில் மட்டுமே குறியாக உள்ளனர். சில நாடுகளில் விவாகத்தை முறித்து வைப்பதில் பெண்களே முன்னிலையில் உள்ளனர். ஊருக்குள் திருமணம் இன்று விரிவுபட்டு அன்று மன்றத்தினர் கனவுகள் நனவாக ஜாதிபாகுபாடுகளை எமது இளைஞ்ஞர்கள் களைகிறார்கள் ஆரோக்கியமானதே. ஆனால் நாம் தெரிவு செய்பவர் குணம்.நடை, பொருத்தம், பின்புலம், ஏற்க்கனவே திருமணமானவரா எனக்கூட பார்க்க தவறுகின்றோம்.காதல் திருமணம், நெற் திருமணம், முகப்புத்தக திருமணம் என பலது ஆனால் அன்றும் காலத்துக்கு ஏற்ப்ப காதல் திருமணங்கள் நடந்தாலும் இன்றைய நிலை என்ன. பல இளைஞ்ஞர்களின் திருமணமுறிவு கூடிக்கொண்டே செல்கிறது, இதை சமூகத்தில் எழுதி வெளிப்படுத்தாமை வருந்தக்கதே.


ஒரு அண்மைச்சம்பவம் இளைஞ்ஞர் ஒருவர் தன் திருமணம் ஊரில் ஒரு ஏழைப்பெண்ணுடன் என்ற முடிவில் அப்படியே நடைபெற்றது. மிக மிக விமர்சையாக நடைபெற்றது.ஆனால் இது இப்போது பெண்வீ ட்டாரே ஆணிடம் இருந்து பிரித்துக்கூட்டிக்கொண்டு

போயுள்ளனர்.இது ஒரு பெரியவர்கள் முடிவாம். சில குடும்பங்களில் பெண்கலே பிரிந்து செல்லும் குணம் கூடுதலாக உள்ளது.ஆண்கள் நேர்மையானவர் என்று அர்த்தம் அல்ல.நான் கூற வருவது பெண்கள் அதிகமாக பிரிந்து செல்ல ஒருமுறைக்கு பல தடவை யோசிப்பார்கள்.இருந்தும் நிறைய விவாகரத்துக்களால் எமது இளம் சமுதாயத்தின் பரம்பரைகள் இடியப் பசிக்கலாகிவிடும். இளைஞ்ஞர்கள் கல்வியில் முன்னேறும் வேகம் வாழ்க்கைத் துணையை தேடுவதிலும் கவனம் செலுத்தி வாழவேண்டும் என்ற அவா எமக்கு அனைவருக்கும் கவலையாகும். குடும்பத்தின் உள விவகாரங்கள் ஏன் இணையங்களில் எழுதவேண்டும் என்ற கேள்வி என்னிடமே எழுகின்றது.ஆனால் பதில் ஒருவனின் குடும்பவிவகாரம் நாலு சுவற்றுக்குள் நடக்குமட்டும் அது அவரவர் குடும்பத்தின் உள் விவகாரம்.அது எப்பொழுது நாலுசுவரைத்தாண்டி வெளிவருகின்றதோ அன்றிலிருந்து சமுதாயத்தின் சீரகேடுகளில் ஒன்றாகும். ஆகவே இந்த விவகாரத்துக்கள் கூடாமல் மக்கள் விழிப்புணர்வுக்காய் வெளிக்கொணரவேண்டும் என்பதால் இதை எழுதியுள்ளேன்.

"அன்றைய விவாகங்கள் ஆயுள்வரை இன்றைய விவாகங்கள் எதுவரை?"

பண் த.பாலா

# 27ம் ஆண்டு
# நினைவஞ்சலி


**கந்தையா ஐங்கரன்**

**திருநாவுக்கரசு ஜெகதீஸ்வரன்**

**கதிரமலை நந்தீசன**

**குணதிலகம் பாஸ்கரன்**